<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 13.03.2026

அசல் வழக்கு எண். 204/2020

வா.சா. 1. – முத்து, த/பெ.ஆப்ரகாம்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

கடந்த 22.10.1999 ஆம் ஆண்டு முதல் பிரதிவாதி கனகா என்பவர் தன்னுடைய பொது அதிகார முகவரான நந்தகுமார் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்து மீராபாய் என்பவருக்கு சொத்தை விற்பனை செய்து விட்டார் என்றால் தெரியாது உங்களிடம் காட்டப்படுகின்ற ஆவணம் அந்த ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. அதாவது 1905 சதுர அடி விற்பனை செய்தப்பட்டதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.வழக்கு சொத்தின் லே–அவுட் காப்பி அன்று நான் காட்டினேன் நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்த்துள்ளேன். லே அவுட் காப்பியில் எத்தனை சதுர அடி என்று போட்டு உள்ளது என்றால் 1905 சதுர அடி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நீங்கள் கிரையப்பத்திரம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான் அதில் எவ்வளவு சதுர அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1368 சதுர அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் கிரயம் வாங்கும் பொழுது வில்லங்கச் சான்று பார்த்து வாங்கினீர்களா என்றால் பார்த்து தான் வாங்கினேன். அதில் மீராபாய் என்பவர் 1999 ஆம் ஆண்டு கிரயம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னுடைய வில்லங்கத்தில் அவ்வாறு குறிப்பிடவில்லை. பி.சா.ஆ.2 வில்லங்க சான்று என்றால் சரிதான். அந்த ஆவணம் என்னுடைய வில்லங்கச் சான்று இல்லை என்னுடைய

வில்லங்கச் சான்றிதழில் அவ்வாறு இல்லை. முதல் பிரதிவாதி கனகா என்பவர் இரண்டாம் பிரதிவாதி நந்தகுமார் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார் அதனை இது நாள் வரை ரத்து ஏதேனும் செய்தாரா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. கனகா என்பவர் இரண்டாம் பிரதிவாதி நந்தகுமார் என்பவருக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் நிலுவையில் இருக்கும் பொழுது அதனை ரத்து செய்யாமல் மற்றொரு நபரான ரமேஷ் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியில்லை. முதல் பிரதிவாதி கனகா என்பவர் ரமேஷ் என்பவருக்கு எந்தவிதமான பொது அதிகாரமும் வழங்கவில்லை என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதி கனகா என்பவர் உயிருடன் இருந்த பொழுது காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தாரா என்றால் என் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை. அதேபோல் நந்தகுமார் என்கிற பொது அதிகார முகவர் மீது புகார் ஏதேனும் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்துள்ளார். வழக்கு சொத்து சம்பந்தமாக புகார் ஏதேனும் கொடுத்தாரா என்றால் கொடுத்துள்ளார். அவ்வாறு புகார் கொடுத்ததாக நீங்கள் கூறும் நீதிமன்றத்தில் புகார் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. மூன்றாவது பிரதிவாதி மீரா பாய் என்பவர் வழக்கு சொத்தின் மீது பட்டா வாங்கி உள்ளார் தெரியுமா என்றால் தெரியாது. உங்களுடைய உங்களிடம் காட்டப்படுகின்ற பட்டா அந்த பட்டா என்றால் தெரியாது. சர்வே எண் 307/2ஏ5, பட்டா எண் 2906 மீராபாய் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தெரியாது. மேற்படி பட்டா எண்ணுக்கு சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது அதனுடைய

பசலி எண் 1421 என்றால் அது பற்றி தெரியாது. உங்களுடைய இடத்தில் என்ன கட்டுமானம் செய்து உள்ளீர்கள் என்றால் கடை வீடு இரண்டுமே உள்ளது. எந்த ஆண்டு அந்த கட்டிடம் கட்டப்பட்டது என்றால் 2016 ஆம் ஆண்டு கட்டிடம் கட்ட ஆரம்பித்தேன். சொந்த பணம் போட்டு கட்டினீர்களா என்றால் என்னிடம் கொஞ்சம் பணம் இருந்தது அது அல்லாமல் லோன் வாங்கி கட்டினேன். லோன் எந்த ஆண்டு எடுத்தீர்கள் என்றால் 06.08.2018 அன்று கடன் வாங்கினேன். பணம் எப்பொழுது கொடுத்தார்கள் என்றால் சுமார் ஒரு மாதத்தில் கொடுத்தார்கள். அந்த இடம் கமர்சியல் இடம் என்பதால் ஆக்கிரமிப்பு செய்து கோவிட் காலகட்டத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு தான் கட்டினீர்கள் என்றால் சரியில்லை. நான்காம் பிரதிவாதி முகைதீன் அப்துல் காதர் என்பவர் நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தார்களா? என்றால் கொடுத்தார். எப்பொழுது புகார் கொடுத்தார் தேதி தெரியுமா என்றால் 13.02.2019 ஆம் ஆண்டு புகார் கொடுத்தார். போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் சரிதான். கடந்த 16.02.2019 அன்று போலீசார் வர சொன்னார்கள் நான் சென்றேன் என்னை யாரும் விசாரிக்கவில்லை. கனகா என்பவர் போலீசார் முன்னிலையில் ஆஜரானார்களா என்றால் 8 மாதம் கழித்து என்னை மீண்டும் வர சொன்னார்கள் அப்பொழுது அவர் ஆஜராகி இருந்தார். எங்கு ஆஜரானார் என்றால் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனார் உடன் யார் வந்தது என்றால் அவர் கணவர் உடன் வந்தார். விசாரணையின் போது உங்களது பத்திரங்களை எடுத்துக் கொண்டு சென்று ஆஜர் செய்தீர்களா என்றால் ஆஜர் செய்தேன். ஆஜரான பிறகு போலீசார் யார் யாரை விசாரணை செய்தார்கள் என்றால் கனகாவின் கணவரிடம் விசாரணை

செய்தார்கள் .கனகா என்பவருக்கு 2019 ஆம் ஆண்டில் என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது. கனகா என்பவருக்கு 80 வயதுக்கு மேல் இருந்ததால் அவர் காவல் நிலையத்தில் ஆஜராகவில்லை என்றால் சரி இல்லை. நான்காம் பிரதிவாதி முகைதீன் அப்துல் காதர் என்பவர் கடந்த 26.09.2019 ஆம் ஆண்டு ஆன்லைனில் முதல்வர் தனிப்பிரிவுக்கு புகார் கொடுத்தார் அதன் அடிப்படையில் தான் போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் தெரியாது. போலீசார் வழக்கு சிவில் சம்பந்தமான வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அணுகி தீர்த்துக் கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறிய அனுப்பி விட்டார்கள் என்றால் சரிதான். கனகா என்பவரிடம் கைரேகை எடுத்ததாக கூறுகிறீர்கள் அப்பொழுது கைரேகை எடுக்கும் பொழுது யார் அங்கு இருந்தது என்றால் என்னுடைய வழக்கறிஞர் அவர்கள் இருந்தார்கள். நீங்கள் இருந்தீர்களா என்றால் நான் இல்லை. உங்களுடைய கைரேகை ஏதேனும் போலீசாரிடம் கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. முதல் பிரதிவாதி கனகா என்பவரிடம் கைரேகை எதுவும் போலீசார் பெறவில்லை அவ்வாறு பெற்றதாக நீங்கள் பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நான்காம் பிரதிவாதி மற்றும் ஐந்தாம் பிரதிவாதி ஆகியோருக்கு எதிராக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தீர்கள் அந்த அறிவிப்பானது புகார் கொடுக்கப்பட்ட பிறகு தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நந்தகுமார் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்து நிலுவையில் இருக்கும் பட்சத்தில் ரமேஷ் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்து நீங்கள் கிரயம் வாங்கியது சட்டப்படி செல்லாது என்றால் சரியில்லை அந்த கிரைய பத்திரத்தை காட்டி நீங்கள் மின் இணைப்பு மற்றும் வரிகட்டி வருகிறீர்கள் அது

சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியில்லை. இந்த வழக்கு சொத்து மீராபாய் என்பவருக்கு சொந்தமானது அவரிடம் இருந்து ஐந்தாம் பிரதிவாதி கிரயம் பெற்றது சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரி இல்லை. நான்காம் பிரதிவாதி பொது அதிகாரம் மூலமாக ஐந்தாம் பிரதிவாதி கிரயம் பெற்றது சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியில்லை.ஆகவே கிரையப்பத்திரம் மின் இணைப்பு வரி ரசீதுகள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram